# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 08.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4363/F/2023 & CP 4361/F/2023**

திரு.மூ.குப்பன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருக்கோவிலூர்-605765.

.. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.மூ.குப்பன் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.ச.புவனேஸ்வரி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருக்கோவிலூர் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 03.07.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியாற்றும் வருவாய் வட்டாட்சியர் கண்ணன், மண்டல துணை வட்டாட்சியர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் 01.07.2023 வரை பணி பதிவேடு புத்தக ஆவண நகல்கள் என்பன போன்ற 5 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. அதனைப்பெற்ற பொதுதகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 22.08.2023 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல்

செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 04.09.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 18(1)ன் கீழ் 25.11.2023 நாளிட்ட இரண்டு புகார் மனுக்களை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (08.07.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் 6(1)ன் கீழான மனுவிற்கு 19.09.2023, 09.11.2024 மற்றும் 16.11.2024 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் வழங்கியிருப்பதாகவும் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் மனுதாரர் முழுமையான தகவல்களை பெற்றுக்கொண்டதாக மனநிறைவு கடிதம் அளித்துள்ளதாகவும் கூறி அதற்கான மனநிறைவு கடிதத்தினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இவ்வாணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் மனுதாரரால் வழங்கப்பட்ட மனநிறைவு கடிதம் ஆகியவற்றை உறுதி செய்து இப்புகார் மனுக்களின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4363/F/2023 & CP 4361/F/2023</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருக்கோவிலூர்-605765.

**<u>மனுதாரர்</u>**
திரு.குப்பன்,
எண்.1, சங்கரன் நகர்,
ஆசனூர் ரோடு,
சந்தைபேட்டை அஞ்சல்,
திருக்கோவிலூர் வட்டம்,
கள்ளக்குறிச்சி-605766.

Copy to file: KR/PA